**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**EA 04/2022 in EP No. 53/2010**

**11.06.2025 எ.ம.சா.1கண்ணன் த.பெ. சுப்பிரமணியன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 25 வருடங்களுக்கு மேல் TJ Finance நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். தற்போது நான் மேலாளராக பணிபுரிகிறேன். எங்கள் நிறுவனத்தில் M/s CSR Enterprises என்ற நிறுவனம் அதன் உரிமையாளர் ராஜேஷ் , பார்கவி மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் கடன் வாங்கினார்கள். மேற்படி கடன் அந்த நிறுவனத்திற்காக வாங்கப்பட்ட கடன் என்றால் சரிதான். நாங்கள் மாவட்ட பதிவாளரிடம் தீர்ப்பு முன் ஜப்தி உத்தரவு வழங்க கேட்கவில்லை. தீர்ப்பு பிறக்கப்பட்ட பின்னர்தான் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது. சந்திரசேகரன் என்பவர் திருவண்ணாமலை கரூர் வைஸ்யா வங்கியில் கடன் வாங்கியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி கடனை அடைக்க சந்திரசேகரன் 08.03.2010 அன்று செல்வம் என்பவருக்கு மனு சொத்தான காந்திநகரில் உள்ள வீட்டை கிரையம் கொடுத்தார் என்றால் அதை பின்னர் தெரிந்து கொண்டோம். மேற்படி சந்திரசேகர் 20.07.2011 அன்று மனுதாரர் பஷிர் அகமது என்பவருக்கு மேற்படி சொத்தை கிரையம் கொடுத்தர் என்பது தெரியுமா என்றால் பின்னிட்டு தெரியவந்தது. மேற்படி கிரையபத்திரத்திற்கு ஒரு பிழை திருத்த பத்திரமும் எழுதிக்கொடுத்தார்கள் என்று பின்னிட்டு தெரியவந்தது. மனுதாரர் கிரையம் பெற்றதில் இருந்து பட்டா மாற்றம் செய்து வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் பின்னிட்டு தெரியவந்தது. மனுதாரர் கடந்த 2021 ல் திருவண்ணாமலை ஐசிஐசிஐ வங்கி கிளையில் மனு சொத்தை அடமானம் வைத்து அது இன்று வரை நிலுவையில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மனு சொத்து 14 வருடத்திற்கு முன்பே கிரையம் கொடுக்கப்பட்ட நிலையில் 14.09.2022 அன்றுதான் இந்த நிறைவேற்று மனுவில் ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜப்தி ஏற்பட்டபோது நாங்கள் கடன் கொடுத்த நிறுவனத்திற்கோ அல்லது சந்திசேகர் என்பவருக்கோ அந்த

சொத்தில் உரிமை இல்லை என்பதால் ஜப்தி செல்லாது என்றும் அந்த ஜப்தியை ரத்து செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.